| | | |
|---|---|---|
| | **றோயல் கல்லூரி –கொழும்பு 07**<br>Royal College – Colombo 07 | |
| | மூன்றாம் தவணைப் பரீட்சை 2022 (2023)<br>Third Term Exam 2022 (2023) | 33 \| T \| I |
| | வரலாறு i, தரம் 11<br>History i Grade 11 | நேரம் 1 மணி<br>Time 1 Hours |

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- 1 முதல் 40 வரையுள்ள வினாக்களுக்கு தரப்பட்டுள்ள 1,2,3,4 என்ற விடைகளில் சரியானதும் மற்றும் மிகவும் பொருத்தமான விடைகளைத் தெரிவு செய்க.
- உங்களுக்கு வழங்கப்படும் விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் தரப்பட்டுள்ள கட்டத்தில் (X) அடையாளமிடுக.

## பகுதி 1

1) கி.பி 4 ஆம் நூற்றாண்டளவில் எழுதப்பட்டதும் மகாசேன மன்னனின் ஆட்சிக்கால முடிவு வரை இந்நாட்டின் வரலாற்றுத்தகவல்கள் அடங்குவதுமான நூலாக அமைவது
   1. தாதுவம்சம் 2. போதிவம்சம் 3. தீபவம்சம் 4. மகாவம்சம்

2) புராதன காலத்திற்குரிய இலக்கிய சமயத் தகவல்கள் மற்றும் வம்சக் கதைகள் எழுதப்பட்டது.
   1. களிமண் பலகை 2. செப்புத்தகடுகள் 3. ஓலைச்சுவடிகள் 4. பொன்தகடுகள்

3) மகாவம்சத்தின் முதலாம் பாகம் எழுதப்பட்ட நான்கு நூற்றாண்டுகளின் பின்னர் எழுதப்பட்டுள்ள மொழியாக அமைவது
   1. சிங்களம் 2. சமஸ்கிருதம் 3. மாகதி 4. பாளி

4) இலங்கையின் வரலாற்றினை விளக்கும் போது தூதுகாவியம், போர்க்காவியம் புகழ் காவியம் போன்ற மூலாதாரங்கள் முக்கியமாக அமைவது கீழ்க்காணப்படும் எக்காலப்பகுதியுடன் தொடர்புடையது?
   1. கோட்டை இராசதானி முதல் கண்டி இராசதானி காலம் வரை
   2. தம்பதெனியா காலம் முதல் கோட்டை காலம் வரை
   3. பொலன்னறுவை காலம் முதல் குருணாகல் காலம் வரை
   4. கம்பளை காலம் முதல் கோட்டை காலம் வரை

5) கீழே காணப்படும் எழுத்தாளர்களில் இலங்கைக்கு வருகை தராது, இலங்கைக்கு வருகை தந்தவர்களிடம் கேட்டறிந்து எழுதப்பட்ட எழுத்தாளர்களை குறிப்பிடும். விடையாக அமைவது

   A- அரிஸ்டோட்டில் B- இபின் பதுதா
   C- பிளினி D- பர்னாவோ டி குவேரோஸ்
   E- பாகியன் தேரர் F- ரிபைரோ

   1. A,C,D 2. B,D,F 3. B,C,E 4. A,C,E

6) இலங்கையின் வரலாற்றினைக் கற்கும் போது கல்வெட்டுக்கள் கீழ்வரும் எக்காரணத்தினால் முக்கியம் பெறுகின்றது?
   1. கல்வெட்டுக்கள் கற்களில் பதிக்கப்பட்டு இருப்பதால்
   2. பல்வேறு கால கட்டத்தில் எழுதப்பட்டுள்ளதால்
   3. வம்சக் கதைகளில் காணப்படும் தகவல்களை உறுதிப்படுத்த இவை பயன்படுவதால்.
   4. இலங்கையின் பழைமை வாய்ந்த ஆவண வகையாக காணப்படுவதனால்.


kalvi.lk

7) இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்டகால மனிதன் தொடர்பான தகவல்கள் கிடைக்கப்பெற்ற பழைமையான இடமாக கருதப்படுவது
1. அத்தனகொட அலுலென
2. கித்தள்கல பெலிலென
3. குருவிட்ட பட்டதொம்பலென
4. பாகியன்கல

8) இறந்த உடல்கள் உக்கும் வரை புதைக்கப்பட்டு பின் வெளியில் எடுத்து எலும்புக் கூட்டினை கல்லில் உராய்ந்து மட்டமாக்கப்பட்டுள்ளதுடன் வர்ணம் தீட்டும் வழக்கமும் காணப்பட்டது என்பதற்கு ஆதாரமாக காணப்படும் காலப்பகுதியாக அமைவது
1. முன்வரலாற்றுக்காலம் 2. வரலாற்றுக்கு முற்பட்ட காலம்
3. வரலாற்றுக்கு பிற்பட்ட காலம் 4. வரலாற்றுக்காலம்

9) இலங்கை வரலாற்றில் முதற்தடவையாக ஆற்றினை மறித்து அணைக்கட்டு அமைத்த ஆட்சியாளனாக விளக்குபவன்
1. இளநாக மன்னன் 2. முதலாம் அக்கபோதி
3. இரண்டாம் அக்கபோதி 4. தாது சேனன்

- கீழே தரப்பட்டுள்ள அட்டவனையில் A முதல் H வரை தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 10ம், 11ம் வினாக்களுக்கு விடை எழுதுக?

| | இராசதானி | தொடர்புகள் | தொடர்புடைய நாடு |
|---|---|---|---|
| | | | |
| A | அநுராதபுரம் | C. இந்நாட்டிக் தூதுப் பயணங்கள் இருபது முறை மேற்கொள்ளல் | F-உரோம் |
| | | | |
| B | பொலன்னறுவை | D. ருவன்வெலிசாயாவினை அலங்காரம் செய்ய கண்ணாடிமணிகள் கொண்டுவரப்பட்டமை | G-சீனா |
| | | | |
| | | E. திரிலோக சுந்தரி எனும் இளவரசியினை திருமணம் செய்தமை | H-கலிங்க தேசம் |

10) பாதிகாபய மன்னனுடன் தொடர்புடைய தகவல்களடங்கிய விடையினை தெரிவு செய்க.
1. E G H 2. A D F 3. B D F 4. A C H

11) முதலாம் விஜயபாகு மன்னனுடன் தொடர்புடைய விடையினை தெரிவு செய்க.
1. B E H 2. B D G 3. A D F 4. A E H

12) பண்டைய மன்னர்கள் மக்களுக்கு விழிப்புணர்வு செய்தவற்காக அமுல்ப்படுத்தப்பட்ட சட்டதிட்டங்களடங்கிய கல்வெட்டு பகுதி I லும் அதில் காணப்பட்ட தகவல்கள் பகுதி II லும் காட்டப்பட்டுள்ளது. பகுதி I ஐ பகுதி II உடன் தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடையாக அமைவது


kalvi.lk

| பகுதி I | பகுதி II |
|---|---|
| 1. கொண்டை வெட்டுவான் தூண் கல்வெட்டு | A- சந்தையின் நிர்வாகம் தொடர்பான சட்டதிட்டங்கள் |
| 2. பதுளை தூண் கல்வெட்டு | B- சுற்றாடல் மற்றும் விவசாயம் போன்றவற்றிற்கான சட்டதிட்டங்கள் |
| | C- விகாரைகள் ,ஆராமைகளின் நிர்வாகம் தொடர்பான சட்டதிட்டங்கள் |
| 3. கொடவாய கல்வெட்டு | D- துறைமுகத்தில் அறவிடப்பட்ட தீர்வை வரி |
| | |

1. B A D  2. A C D  3. C A D  4. A B C

13) "போஜக்கபதி" என மூலாதரங்களில் காட்டப்படுவது
1. குளங்களின் நீரினை பயன்படுத்துவோரிடம் இருந்து அறவிடப்பட்ட வரி.
2. அரசனுக்குச் சொந்தமான நிலங்களில் பயிர் செய்வதற்காகச் செலுத்தப்பட்ட வரி.
3. வாய்க்கால்களில் மீன் பிடித்ததற்காக அரசுக்குச் செலுத்திய வரி
4. சேனைகளில் விவசாயம் செய்வதற்காக விதிக்கப்பட்ட வரியாகும்.

14) முற்காலத்தில் நீண்ட தூரத்தினை அளப்பதற்கு பயன்படுத்தப்பட்ட அளவீடுகளை மாத்திரம் அடங்கிய விடையாக அமைவது
1. அங்குலம், வியத்த , பரமாணு
2. வியத்த, யொதுன, உசக
3. கவ்வ, யொதுன , உசக
4. பரமாணு, அங்குலம், வியத்த

15) முற்கால கல்வெட்டுக்களில் வொஹார,லபத,வாபர,வெஜ எனக் குறிப்பிட்டுள்ள நபர்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட பெயர்கள் காணப்படும் விடையினைத் தெரிவு செய்க?
1. வைத்தியர்கள், கலைஞர்கள்,வழக்கறிஞர்கள், வியாபாரிகள்
2. சட்டவல்லுனர்கள், சித்திரக்கலைஞர்கள், வர்த்தகர்கள், வைத்தியர்கள்
3. சித்திரக் கலைஞர்கள் ,வழக்கறிஞர்கள், வைத்தியர்கள், வர்த்தகர்கள்.
4. வர்த்தகர்கள்,வைத்தியர்கள்,வழக்கறிஞர்கள், சித்திரக்கலைஞர்கள்

16) *நகர நிர்மாணத்திட்ட வரைபட மாதிரியில் இருந்து சுதந்திர பரிமாற்றம் அடைதல்.
*நகரங்கள் பாரியளவுடையதாக காணப்படாமை.
மேலுள்ள் கூற்றுகளுடன் தொடர்புடைய இரு நகரங்களாக அமைவது,
1. தம்பதெனியா, குருணாகல்
2. அநுராதபுரம், தம்பதெனியா
3. அநுராதபுரம், பொலன்னறுவை
4. பொலன்னறுவை, குருணாகல்

17) இலங்கையின் வாஸ்து விஞ்ஞானத்தின்படியான நிர்மாணிப்புக்களில் தென்கிழக்கு ஆசிய அம்சங்கள் அடங்கிய உதாரணமாக அமையும் விடையினைத் தெரிவு செய்க.
1. எம்பக்க தேவாலயம்
2. பொலன்னறுவை கல்விகாரையின் புத்தர்சிலை
3. தலதா மாளிகை மற்றும் எம்பக்க தேவாலயம்
4. திவங்க சிலை மனை



kalvi.lk

18) கீழே குறிப்பிப்பட்டுள்ள வரலாற்று நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தும் போது கிடைக்கும் விடையாக அமைவது

A- அராபி இனத்தவரான இபின் பதூதா இலங்கைக்கு வருகை தரல்

B- கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பு

C- பாளி மொழியில் இருந்த புத்தகம் பன்சிய பனஸ் ஜாதகய எனும் பெயரில் மொழிபெயர்க்கப்பட்டமை.

D- பெலிகலை தலதாமாளிகையினை அமைத்தல்.

1. D B A C 2. A B C D 3. B D C A 4. B C D A

19) இலங்கையில் ஆட்சிக்கு வந்த மன்னர்களில் சிலர் அரசாட்சிக்கு வருவதற்கு முன் பயன்படுத்தப்பட்ட பெயர்கள் கீழே A முதல் E வரை தரப்பட்டுள்ளன.

A- கீர்த்தி இளவரசன் B – சப்புமல் குமாரன்

C- மகா ஆஸ்தான குமாரன் D- டிக்கிரி இளவரசன்

E -அம்புலுகல குமாரன்

மேலுள்ள தகவலின்படி முதலாம் இராஜசிங்கன்,ஆறாம் புவனேகபாகு, எட்டாம் வீர பராக்கிரமபாகு போன்ற மன்னர்கள் பயன்படுத்திய பெயர்களைக் குறிக்கும் விடையாக அமைவது,

1. A C D 2. A D E 3. D B E 4. D B C

20) ஆறாம் பராக்கிரமபாகு மன்னனுக்கு ஆரம்பக் காலத்தில் தேவையான பாதுகாப்பினை வழங்கியவர்.

1. வீதாகம மஹா ஸ்தவீர 2. சங்கரகித்த மகாநாயக்க தேரர்
3. வெலிவிட்ட சரணங்கரதேரர் 4. தொட்டகமுவ ஸ்ரீ ராகுலதேரர்

21) யாழ்ப்பாண இராச்சியம் தொடர்பான பொருத்தமற்ற கூற்றாக அமைவது

1. இங்கு ஆட்சி பரம்பரை நாயக்கர் வம்சம் ஆகும்.
2. யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகர் நல்லூர் ஆகும்.
3. மலைநாட்டு இராச்சியத்தைப் போன்று இயற்கையான பாதுகாப்பு இங்கு இல்லாமை.
4. இராசரட்டை நாகரிகம் வீழ்ச்சியடைந்ததால் யாழ்ப்பாண இராச்சியம் உருவாக்கப்பட்டது.

22) மலைநாட்டு ஆட்சியாளர்கள் மற்றும் போர்த்துக்கேயர்களுக்கிடையில் போர் நடைபெற்ற இடங்கள் பகுதி 1 லும் அவற்றை வழிநடத்திய போர்த்துக்கேய தளபதிகள் பகுதி 11 லும் காட்டப்பட்டுள்ளது. இவற்றை தொடர்புபடுத்தும் போது கிடைக்கும் சரியான விடையாக அமைவது

| பகுதி I | பகுதி II |
|---|---|
| 1. தந்துறைப்போர் | 1. தொன் ஜெரோனிமோ த அசவேது |
| 2. பலனைப்போர் | 2. கொன்ஸ்தாந்தினு த சா |
| 3. ரந்தெனிவெலப் போர் | 3. தியோகோ த மெல்லோ |
| 4. கண்ணொறுவப்போர் | 4. ஜேரோ லோபேஸ்த சூசோ |

1. D A B C 2. D B A C 3. B A D C 4. C D B A

23) கண்டி இராச்சியத்தில் பிரதேச ஆட்சிக்குழுக்கள் மற்றும் அதன் பிரதானிகளைக் காட்டும் விடையாக அமைவது

1. பத்தே – பத்தே நிலமே
2. மகாவாசல – மகா கபடா நிலமே
3. ரட்டவசம – மகா திசாவே
4. புனித தந்த தாது – தியவடன நிலமே



kalvi.lk

24) இரட்டை ஆட்சி வீழ்ச்சியடைந்ததன் பின் இந்நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றமாக அமைவது
   1. ஆட்சி செயற்பாடுகளை வர்த்தக சங்கத்திற்கு வழங்குதல்
   2. இலங்கை முழுமையாக பிரித்தானியர்களின் கைவசமாதல்
   3. கரையோர பகுதியும் மலைநாட்டு இராச்சியத்தின் கீழ் கொண்டு வருதல்
   4. கரையோரப் பகுதிகள் பிரித்தானியரின் ஆதிக்கத்தின் கீழ்கொண்டு வரப்படுதல்.

25) கி.பி 1818 சுதந்திரப் போராட்டத்தின் போது ஆங்கிலேயர்களுக்கு சார்பாக செயற்பட்ட பிரதானியாக அமைவது
   1. எஹலபொல மற்றும் கெப்பட்டிபொல
   2. கெப்பட்டிபொல மற்றும் மொல்லிகொட
   3. எஹலபொல மற்றும் எக்னெலிகொட
   4. மொல்லிகொட மற்றும் எக்னெலிகொட

26) 19ம் நூற்றாண்டில் இலங்கையில் நடைபெற்ற சமய மற்றும் கலாச்சார புரிந்துணர்வு தொடர்பான கூற்றுக்கள் தரபபட்டுள்ளன. இவற்றுள் பொருத்தமற்ற விடையினைத் தெரிவு செய்க.
   1. வலானை சித்தார்த்த தேரர் - இரத்மாலனை பரமதம்ம சேதிய பிரிவெனா
   2. ஆறுமுக நாவலர்- உதயபானு பத்திரிகை
   3. ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர் - இரத்மலானை பரமதம்ம சேதிய பிரிவெனா
   4. சித்திலெப்பை – மருதானை சாஹிராக் கல்லூரி

27) இலங்கை தேசியசங்கத்தை உருவாக்கி அதற்கு தலைமை தாங்கிச் செயற்பட்டவர் யார்?
   1. சேர். பொன்னம்பலம் இராமநாதன்
   2. டி.பி.ஜயதிலக
   3. சேர்.பொன். அருணாசலம்
   4. டி.எஸ.சேனாநாயக்க

28) கீழே A முதல் D வரை தரப்பட்டுள்ள பதவிப்பெயர்களுள் 1972 மற்றும் 1978ம் ஆண்டு அரசியலமைப்பு மறுசீரமைப்பின் போது நீக்கப்பட்ட பதவிகளின் பெயர்கள் காட்டப்படும் விடையாக அமைவது

   A- ஆளுநர்

   B- பிரதம ஆளுநர்

   C- பெயரளவு நிறைவேற்று ஜனாதிபதி

   D- நிறைவேற்று ஜனாதிபதி

   1. B உம் C உம்      2. A உம் B உம்
   3. B உம் D உம்      4. C உம் D உம்

29) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கருத்தொன்றுக்கு நேரடியாக பொதுமக்களின் கருத்து பெற்றுக் கொள்வதற்காக நடைபெறும் தேர்தல் அழைக்கப்படுவது
   1. ஜனாதிபதித் தேர்தல்      2. பொதுசன அபிப்பிராயத் தேர்தல்
   3. மாகாணசபைத்தேர்தல்      4. பாராளுமன்றத் தேர்தல்

30) மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் பொல்கொல்லையில் நதியை மறித்து சுதுகங்கைக்கு நீரை வழங்கி உலர்வலயத்திற்கு நீரை விநியோகிப்பதற்கு எந்நீர்த்தேக்கம் பயன்படுத்தப்பட்டது?
   1. விக்டோரியா      2. போவர்தென்ன
   3. கொத்மலை      4. ரந்தெனிகல



kalvi.lk

31) மறுமலர்ச்சிக் காலத்தில் கலைத்துறையில் ஏற்பட்ட பிரதான மாற்றத்தைக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.
1. கலைநிர்மாணங்கள் தரத்திற்கு ஏற்ப முன்வருதல்.
2. கலைப்படைப்புக்கள் சமயம் சார்பாக அமைந்தமை.
3. கலைஞர்களின் திறமைகள் சுதந்திரமாக வெளிப்பட்டமை
4. ஆலயங்கள் கலைஞர்களுக்கு அனுசரணை வழங்கியமை

32) கைத்தொழில் புரட்சியுடன் தொடர்புடைய கண்டுபிடிப்புக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.''அ'' பகுதியுடன் ''ஆ'' பகுதியை தொடர்புபடுத்தும் போது பெறப்படும் சரியான விடையாக அமைவது

| அ | ஆ |
|---|---|
| 1. மியூல் இயந்திரம் | A டெம்லர் |
| 2. ரோலர் இயந்திரம் | B ஹம்பிறி டேவி |
| 3. பாதுகாப்பு விளக்கு | C- ஹென்றி கோட் |
| 4. மோட்டார் வண்டி | D- சாமுவெல் கொறம்ப்டன் |

1. A B C D    2. D C B A    3. A B D C    4. C D A B

33) கி.பி 1967 இல் இந்நாட்டுப் போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட மாற்றமாக அமைவது
1. கொழும்பு கண்டி பெருந்தெரு அமைக்கப்பட்டது.
2. முதன் முறையாக கொழும்பில் இருந்து கண்டி வரை புகைவண்டியொன்று போக்குவரத்தில் ஈடுபட்டமை.
3. கொழும்பு கண்டி புகையிரதப் பாதை ஆரம்பிக்கப்பட்டது.
4. கொழும்பு பதுளை புகையிரதப் பாதை ஆரம்பிக்கப்பட்டது.

- கீழே A,B யில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 34ம் வினாவுக்கு விடையளிக்குக.

A- டெனிஸ் மைதான உறுதிமொழி
B – லூசிடானியா கப்பலை மூழ்கடிக்கச் செய்தல்

34) பிரான்சியப் புரட்சியுடன் தொடர்புபட்டது.
1. A உம் B உம் உண்மையாகும்.
2. A உம் B உம் பொய்யானது
3. A உண்மையானது B பொய்யானது
4. A பொய்யானது B உண்மையானது

35) கருஞ்சட்டை இராணுவம் என்னும் பெயரில் ஆயுதப்படையை அமைத்து பாசிச வாதத்திற்கு எதிரானவர்களை அழித்தவன் யார்?
1. அடோல்ப் ஹிட்லர்
2. ஒட்டோவொன் பிஸ்மார்க்
3. பெனிடோ முசோலினி
4. இரண்டாம் வில்லியம்

கீழே A,B,C,D யினால் காட்டப்படும் கூற்றுத் தொகுதிகளை ஆராய்ந்து 36 முதல் 38 வரையான வினாக்களுக்கு விடை தருக?

A .1 – சர்வதேச சங்கம்
2. இரண்டாம் உலகமகாயுத்தம்

B. 1 – அணுகுண்டுப்போர்
2. – முதலாம் உலகப்போர்

C . 1. - சுற்றாடல் மாசுபடுதல்
2.- தொழிநுட்ப மயமாதல்

D 1. – யூத இனத்தவர்கள்
2. – நாசி படையினர்

36) முதலாவதின் தவறினால் இரண்டாவது ஆரம்பிக்க காரணமாக அமையும் தொகுதி
1. A 2. B 3. C 4. D

37) முதலாவது அதிகரிப்பதற்கு இரண்டாவது அதிகரிப்பது காரணமாக இருத்தல்.
1. A 2. B 3. C 4. D

38) முதலாவதிற்கும் இரண்டாவதிற்கும் இடையில் தொடர்பற்ற கூற்றாக அமையும் தொகுதி
1. A 2. B 3. C 4. D

39) “ஐக்கிய இனத்தவர்” என முதன் முறையாக பயன்படுத்தப்பட்டது.
1. பணக்கார வர்க்கத்தினருடன் தொடர்புடைய இனத்தவர்கள்
2. சோசலிச வர்க்கத்தினருடன் தொடர்புடைய வர்க்கத்தினர்
3. திறமையான ஆதிக்கத்தை உடையவர்களுக்கு எதிராக சண்டையிடுபவர்கள்.
4. நட்பு ஆதிக்கத்தையுடையவர்களுக்கு எதிராக சண்டையிடுபவர்கள்.

40) சோசலிச கொள்கைகளை தமது அரசியலமைப்பில் சேர்த்துக்கொள்ளாத நாடாக அமைவது
1. கிழக்கு ஜேர்மனி
2. சீனா
3. கியூபா
3. பிரான்ஸ்



kalvi.lk

kalvi.lk

| | | |
|---|---|---|
| | றோயல் கல்லூரி –கொழும்பு 07<br>Royal College – Colombo 07 | |
| | மூன்றாம் தவணைப் பரீட்சை 2022 (2023)<br>Third Term Exam 2022 (2023) | 33 T II |
| | வரலாறு II தரம் 11<br>History II Grade 11 | நேரம் 3 மணித்தியாலம்<br>Time 3 Hours |

- பகுதி I ல் 1ம் வினாவிற்கும்.
- பகுதி II ல் நான்கு வினாக்களுக்கும்
- பகுதி III ல் விரும்பிய ஏதாவது ஒரு வினாவுக்குமாக மொத்தம் ஆறு வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி I

1) அ) கீழே (I) ல் தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப்படத்திலும் (II) ல் தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை உலகப்படத்திலும் குறித்துப் பெயரிடுக.

(i) வளவகங்கை, மல்வத்து ஓயா, அநுராதபுரம், ஹுருளுவாவி, தம்பதெனியா,கதிர்காமம், லங்காபட்டின, கேதீஸ்வரம், காலி, இப்பன்கட்டுவ,கண்டி, நெடுந்தீவு ( 12 புள்ளிகள்)

(ii) இத்தாலி , கல்கத்தா, மலாக்கா நீரிணை, கொன்ஸ்தாந்திநோபிள், பிரித்தானியா, டோக்கியோ ( 6 புள்ளிகள்)

ஆ) I கீழே A,B,C,D யில் காட்டப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்களுக்கான விடைகளினை முறையே உமது விடைத்தாளில் எழுதுக.

A - கம்பளை இராச்சியத்தின் முதல் ஆட்சியாளன்

B – ஆங்கிலேயர் ஆக்கிரமிப்பின் போது ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னன் தலைமறைவாகிய பிரதேசம்

C – போர்த்துக்கேயர்கள் இலங்கையினை அழைத்த விதம்

D- அணிசேரா நாடுகளின் மகாநாடு நிறுவப்படுவதற்கு வழிகாட்டியாகத் திகழ்ந்த இந்தியப் பிரதமர்



kalvi.lk

A மற்றும் B யில் கொடுக்கப்பட்டுள்ள படத்தினை அடிப்படையாகக் கொண்டு கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

படம் A

II.



1. A உருவில் காட்டப்படும் நிர்மாணிப்பின் பெயர் என்ன?
2. இது எப்பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டது?
3. இது எத் தேவைக்காக பயன்படுத்தப்பட்டது?
4. இந் நிர்மாணம் எவ்வரலாற்றுக் காலத்திற்கு உரியதாகும்?

(4 புள்ளிகள்)

படம் B

III.



1. B உருவில் காணப்படுபவரின் பெயர் என்ன?
2. அவர் எவ் இனத்தைச் சேர்ந்தவர்?
3. இவரும் இவரின் மனைவியும் கொலைசெய்யப்பட்ட நகரம் எது?
4. இந்நிகழ்வினை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட யுத்தம் எது?

( 4 புள்ளிகள்)

பகுதி II

2) 1. வரலாற்றுக்கு முற்பட்டகால மனிதன் வாழ்ந்த இடங்கள் A,B,C யினால் காட்டப்பட்டுள்ளது. இவ் இடங்களுக்கு உரிய சுற்றாடல் வலயங்களை ஒழுங்கு முறையாக உங்கள் விடைத்தாளில் எழுதுக?

A- பொம்பரிப்பு

B- ராவணா எல்ல

C – பட்டதொம்பலென ( 3 புள்ளிகள்)



kalvi.lk

II. A- வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் கல்லாயுதங்களை எவற்றினால் தயாரித்தான்? ( 2 புள்ளிகள்)

B- இவர்கள் உணவினைப் பெற்றுக் கொண்ட தாவர வகைகள் இரண்டினை எழுதுக? ( 2 புள்ளிகள்)

III. முன்வரலாற்றுக் காலத்தில் மனிதனின் வாழ்க்கை முறையில் காணப்பட்ட அம்சங்களை விளக்குக? ( 5 புள்ளிகள்)

IV. வரலாற்றுக் காலக் குடியேற்றத்தின் கட்டமைப்பினையும் அதன் தன்மையினையும் மூன்று விடயங்களின் அடிப்படையில் விளக்குக? ( 6 புள்ளிகள்)

3) i. அரச கோட்பாடுகள், எண்ணக் கருக்கள் வளர்ச்சியுற்ற முறைகள் மூன்றினைக் குறிப்பிடுக? (3 புள்ளி)

ii. கீழே காணப்படும் வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புடைய மன்னர்களைக் குறிப்பிடுக?

A- பத்தினி தெய்வக் கோயில் ஒன்றின் திறப்பு விழாவிற்காக இந்தியாவின் சேர நாட்டிற்குச் சென்றவன்

B- இலம்பகர்ண வம்சத்தின் முதல் ஆட்சியாளன்

C – தனது பத்தவது ஆட்சி வருடத்தில் நாட்டின் கிராம எல்லைகளை வகுத்தவன்

D- சோழ ஆட்சியாளர்களிடமிருந்து பொலன்னறுவையை விடுவித்தவன் ( 4 புள்ளிகள்)

iii. துட்டகைமுனு மன்னன் காலத்தில் இடம்பெற்ற முக்கியமான விடயங்கள் இரண்டினை விளக்குக? (5புள்ளிகள்)

iv. முற்காலத்தில் எமது நாட்டில் வளர்ச்சியடைந்த வைத்தியத்துறை காணப்பட்டதற்கான ஆதாரங்களை மூன்று விடயங்களின் அடிப்படையில் விளக்குக. (6புள்ளிகள்)

4) i. கீழே தரப்பட்டுள்ள குளங்களை கட்டிய மன்னர்களைக் குறிப்பிடுக?

A- கவுடுளுவாவி

B- பதவியாக்குளம்

C – பராக்கிரம சமுத்திரம் ( 3 புள்ளிகள்)

ii. கீழே A முதல் D வரை தரப்பட்டுள்ள கூற்றுக்களுக்கு பொருத்தமான விடையினை அடைப்புக் குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக?

A- இடி மின்னலில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக பாரிய தூபிகளின் மேல் இடிதாங்கி பொருத்தப்பட்டமை.

B- குளத்தில் ஏற்படும் நீர் அலையினால் குளக்கட்டு அரித்து செல்வதை தடுக்க அமைக்கப்பட்ட நிர்மாணம்

C – கந்தளாய் மற்றும் கிரிதலை வாவிகளுக்கு நீரினைக் கொண்டு செல்லும் கால்வாய்

D- நெல்மணி அளவிலான தங்கத்தில் 21 பூ வேலைப்பாடுகள் கொண்ட தங்கம் கண்டுபிடிக்கப்பட்டமை.

(தெடிகம யானை விளக்கு, அலைதாங்கி, யோதவாவி, எலஹர, அபயகிரி, ருவன்வெலிசாய , ஜேதவனராம) ( 4 புள்ளிகள்)



kalvi.lk

iii. முற்கால ஆட்சியாளர்கள் பாரிய குளங்களை நிர்மாணித்ததன் நோக்கங்கள் இரண்டினைக் கூறி விளக்குக? ( 5 புள்ளிகள்)

iv. பொலன்னறுவை இராசதானி வீழ்ச்சியடைவதற்கான காரணங்கள் மூன்றினைக் கூறி விளக்குக? (6 புள்ளிகள்)

5) i. கண்டி இராச்சியத்திற்கு பாதுகாப்பு வழங்கிய ஆற்றினையும் கடினமான பாதைகள் இரண்டினையும் குறிப்பிடுக? ( 3 புள்ளிகள்)

ii. கீழே A முதல் D வரை தரப்பட்ட தகவல்களுடன் தொடர்புடைய நபர்களை முறையே எழுதுக?

A- கண்டி இராச்சியத்தின் முதல் மன்னன்

B- கி.பி 1602 ஆம் ஆண்டு கண்டியை ஆக்கிரமித்த போரத்துக்கேயத் தளபதி

C – நாயக்க அரச வம்சத்தின் முதல் மன்னன்

D- கி.பி 1638 இல் ஒல்லாந்தருடன் ஒப்பந்தத்தினை ஏற்படுத்திக்கொண்ட கண்டி இராச்சிய மன்னன் ( 4 புள்ளிகள்)

iii. முதலாம் விமலதர்ம சூரிய மன்னனால் மேற்கொள்ளப்பட்ட சேவைகள் இரண்டினைக் கூறி விளக்குக? ( 5 புள்ளிகள்)

iv. கண்டி இராச்சியத்தின் சமூக அமைப்பின் மூன்று விடயங்களினை உதாரணங்கள் மூலம் விளக்குக? (6 புள்ளிகள்)

6) i. கி.பி 1798 இல் இருந்து கி.பி 1815 வரையான காலத்தில் இலங்கையினை ஆட்சிசெய்த பிரித்தானிய ஆளுநர்கள் மூவரினைக் குறிப்பிடுக? ( 3 புள்ளிகள்)

ii. கீழே A,B,C,D யினால் தரப்பட்டுள்ள கூற்றுக்களுக்குப் பொருத்தமான விடையினைக் குறிப்பிடுக?

A- கி.பி 1762 ல் மலைநாட்டுக்கு வருகை தந்து கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னனை சந்தித்த ஆங்கிலேய தூதுவர்

B- ஆங்கிலேயர் முதலாவதாக ஒல்லாந்தரிடம் இருந்து கைப்பற்றி ஆட்சிக்குட்படுத்தப்பட்ட கரையோரப்பிரதேசம்

C – கி.பி 1815 கண்டி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ஆங்கிலேய ஆளுநர்.

D- கி.பி 1848 ஆம் ஆண்டுப் போராட்டத்தின் பிரதான மத்திய நிலையமாக திகழ்ந்த பிரதேசம். ( 4 புள்ளிகள்)

iii A – பிரித்தானியர்களினால் எமது நாட்டில் பயிரிடப்பட்ட பெருந்தோட்டப் பயிர்கள் மூன்றினைக் குறிப்பிடுக? ( 2 புள்ளிகள்)

B- பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் வளர்ச்சிக்கு காரணமான கோல்புறூக் ஆணைக் குழுவின் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் இரண்டினை விளக்குக? (3 புள்ளிகள்)

iv. பிரித்தானியா ஆட்சியினால் இந்நாட்டில் ஏற்பட்ட சமூக மாற்றங்கள் மூன்றினை விளக்குக? ( 6 விளக்குக)

7) i. கீழே காணப்படும் அரசியல் கட்சிகள் உருவாகுவதற்கு காரணமானவர்களை குறிப்பிடுக?

A - இலங்கை சமசமாஜக் கட்சி

B - ஐக்கிய தேசியக் கட்சி

C- ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (3 புள்ளிகள்)

ii. கீழே தரப்பட்டுள்ள அரசியல் மாற்றங்கள் எவ் அரசியல் மறுசீரமைப்பின் கீழ் உருவாக்கப்பட்டது என்பதை குறிப்பிடுக?



kalvi.lk

A - சட்டவாக்கக் கழகம் அமைக்கப்பட்டமை

B - சட்டவாக்கக் கழகத்திற்கு முதன்முறையாக வாக்குரிமை மூலம் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டமை.

C- சட்டவாக்கக் கழகத்தில் முதன்முறையாக உத்தியோக சார்பற்றோர் பெரும்பான்மை பெற்றமை.

D – செனட் சபைக்கு 30 அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டமை.

( 4 புள்ளிகள்)

iii. இந்நாட்டில் உலர் வலயத்தில் விவசாயக் குடியேற்றத் திட்டங்கள் உருவாக்கப்பட்டமைக்கான நோக்கங்கள் இரண்டினைக் கூறி விளக்குக?

( 5 புள்ளிகள்)

iv. மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் நோக்கங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக?

( 6 புள்ளிகள்)

பகுதி III

8) i. மறுமலர்ச்சிக் காலத்தில் ஐரோப்பாவில் ஏற்பட்ட கல்வி சீர்திருத்தத்தினால் இலக்கியத்துறைக்குப் பணியாற்றிய இங்கிலாந்து எழுத்தாளர்கள் மூவரைக் குறிப்பிடுக. ( 3 புள்ளிகள்)

ii. கீழே தரப்பட்டுள்ள தகவல்களை கண்டுபிடித்தவர்களின் பெயர்களைக் குறிப்பிடுக?

A- கோள்கள் அனைத்தும் சூரியனை நீள் வட்டப்பாதையில் சுற்றி வருதல்.

B- புவியீர்ப்பு சக்தி

C- மனித உடலின் குருதிச் சுற்றோட்டம் தொடர்பான முக்கிய தகவல்கள்

D- அச்சு இயந்திரம் தயாரித்தல் ( 4 புள்ளிகள்)

iii. நாடுகாண் பயணங்கள் மேற்கொள்வதற்கு ஏதுவான காரணங்கள் இரண்டினை விளக்குக? ( 5 புள்ளிகள்)

iv. ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் தாக்கம் காரணமாக இலங்கையில் அரசியல் பொருளாதார மற்றும் சமூக பண்பாட்டு மாற்றங்கள் ஒவ்வொன்று வீதம் குறிப்பிட்டு விளக்குக? ( 6 புள்ளிகள்)

9) i. பிரித்தானியா பிரதமர் ஜோன் கிரன்வில் கி.பி 1764, 1765, ஆகிய ஆண்டுகளில் அமெரிக்க குடியேற்றங்களுக்கு விதிக்கப்பட்ட புதிய சட்டங்கள் மூன்றினைப் பெயரிடுக? ( 3 புள்ளிகள்)

ii. கீழே A,B,C,D யினால் காட்டப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைய பொருத்தமான விடையினை அடைப்புக் குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக?

A- அமெரிக்கா சுதந்திரப்போர் ஆரம்பிப்பதற்கு ஏதுவான நிகழ்வு

B- ‘‘நானே அரசு’’ எனக் கூறியவன்

C- சட்டத்தின் சாரம் என்ற நூலினை எழுதியவர்

D- ரஷ்யப் புரட்சிக்கு தலைமை தாங்கியவர்

( வோல்டேயர், மொன்டெஸ்கியூ, கெரன்ஸ்கி , வீ.ஐ.லெனின், லியோன் ட்றொஸ்கி, பொஸ்டன் தேநீர் விருந்து, 14 ஆம் லூயி மன்னன்)

( 4 புள்ளிகள்)

iii. பிரான்சியப் புரட்சிக்கான ஏதுவான சமூகக் காரணங்கள் இரண்டினைக் கூறி விளக்குக? ( 5 புள்ளிகள்)

iv. ரஷ்யப் புரட்சியினால் ஏற்பட்ட விளைவுகளை பொருளாதார அரசியல் ரீதியாக ஒவ்வொரு உதாரணங்களுடன் விளக்குக?

( 6 புள்ளிகள்)



kalvi.lk

kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி அධ්‍යාපන Kalvi.lk

Whatsapp 075 287 1457